மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவர அறிக்கை[a] ஒன்று சட்ட மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே யிருக்கின்ற சில பாதிரிமார்கள் கிராமப்புறங்களிலே மருத்துவ மனைகள் தொடங்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கு அரசு அனுமதி கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வெளிநாட்டிலே இருக்கக்கூடிய பாதிரிமார்கள் இங்கே தொடங்க முடியாது. வெளிநாட்டிலேயிருந்து இங்கே வந்திருக்கின்ற பாதிரிமார்கள் மத்திய அரசின் அனுமதியோடு தொடங்கலாம். வெளிநாட்டிலேயிருக்கின்றவர்களுடைய ஆதரவோடு இங்கேயுள்ளவர்கள் மருத்துவ மனைகள் தொடங்கவேண்டுமானல் அதற்கு தமிழக அரசு ஒத்துழைத்து மத்திய அரசின் அனுமதியைப் பெறலாம். ஆனல் இங்கே இருக்கின்ற மூலக் கேள்வி உள்நாட்டிலிருக்கின்றவர்கள் கிராமங்களிலே மருத்துவ மனைகளைத் தொடங்குவது பற்றி.

திரு. எஸ். வடிவேல் : எந்த எந்த இடங்களிலே தனியார்களின் மருத்துவ மனைகள் நடைபெறுகின்றன. மத்திய அரசு அளித்துள்ள தொகை எவ்வளவு...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் விவரங்கள் கேட்கிறீர்கள்........

திரு. எஸ். வடிவேல் : சொல்லட்டுமே !

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சொல்லட்டுமே என்ருல் எப்படி ? கேள்வி கொள்கை பற்றியது. ஆனல் விவரங்கள் கேட்டால் எப்படி ? நான் இந்தக் கேள்விக்கு அனுமதி மறுக்கிறேன்.

Employment opportunities for Medical Graduates

* 703 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the State Government has any proposal to give employment to all the Medical Graduates ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

---

[a] 645-646-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.